# மலைச்சாரல் பகுதியில் மேம்பாட்டுத் திட்டம்: வங்சா மாஜூ குடியிருப்புவாசிகள் கவலை

கோலாலம்பூர், ஏப். 16-
கோலாலம்பூர் புக்கிட் டின்டிங் மலைச்சாரல் பகுதியில் மேம்பாட்டுத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவது வங்சா மாஜூ மற்றும் செத்தியா வங்சா மக்கள் மத்தியில் கவலையினை ஏற்படுத்தியுள்ளது.



மலைச்சரிவின் நிலைத்தன்மையற்றதினால் இவர்களின் பாதுகாப்பிற்கு மருட்டல் ஏற்பட்டுள்ளது. இரண்டு கட்ட மேம்பாட்டு திட்டமானது எதிர்மறையான பின்விளைவுகளை தோற்றுவிக்கலாம் என்கின்றனர்.

இங்குள்ள குடியிருப்பாளர்கள் இரண்டு கட்ட மேம்பாட்டு திட்டத்தினால் போக்குவரத்து நெரிசல் மற்றும் பேரிரைச்சலை ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புக்கிட் வங்சா மாஜூ மேட்டுப்பாங்கான பகுதியில் 50க்கும் மேற்பட்ட இணை வீடுகள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

மழைப்பகுதிகளில் சுற்றுப்புற சூழலை பாதுகாக்க முற்பட்டுள்ள புக்கிட் டிண்டிங் நண்பர் குழு ஏப்ரல் 12 ஆம் தேதியன்று மேம்பாட்டாளருடன் ஒரு சந்திப்புக் கூட்டத்தை நடத்தியது. மக்களின் மனக் குறைகள் மேம்பாட்டாளரிடம் தெரிவிக்கப்பட்டதாக இதன் தலைவர் அட்ரிஹாஷிம் அப்துல் ரசித் குறிப்பிட்டார்.

அண்மையில் கனமான மழைக்காரணமாக பல பாதிப்புகள் ஏற்பட்டன. போக்குவரத்து நெரிசல், குறுகிய வழிப்பாதைகள் மற்றும் பேரிரைச்சல் எல்லாம் நிலைமையினை மேலும் மேலும் மோசமாக்கி வருகிறது.

குடியிருப்பாளர்கள், இயற்கை வள அமைச்சராக இருக்கும் செத்தியாவங்சா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நிக் நஷ்மி நிக் அகமதுவிடம் பிரச்சினை கொண்டு சென்றுள்ளனர்.

சுற்றுச்சூழல் இலாகாவானது சம்பந்தப்பட்ட பகுதியில் பரிசோதனை நடத்தியது. மண் அரிப்பு விவகாரம் குறித்து மேம்பாட்டாளர் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. சம்பந்தப் பட்ட பகுதியில் தொடர்ச்சியான பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் வண்ணம் செத்தியா வங்சா நாடாளுமன்ற உறுப்பினர் கோலாலம்பூர் மாநகர் மன்றத்துடன், சுற்றுச்சூழல் இலாகாவுடன் தொடர்பில் இருந்து வருவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.